ஐ.வி.டி.பி
# மலர்
மகளிர் சுய உதவிக்குழு
புத்துணர்ச்சி இதழ்

மொட்டு 21 மலர் 49 [ தனிச்சுற்றுக்கு மட்டும் ] ஏப்ரல் 2025 – அக்டோபர் 2025



## ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்
## இராமன் மகசேசே
## திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள்
## மக்கள் பணியில் நம்பிக்கை விதைத்து

# 50 பொன் விழா





## நல்வாழ்வை அறுவடை செய்த ஆண்டுகள்
## (1975-2025)



# இயக்குநர் இதயத்திலிருந்து

அன்புள்ளம் கொண்ட உறுப்பினர்களே, பணியாளர்களே

அனைவருக்கும்

*வணக்கங்களும், வாழ்த்துக்களும்...*

நமது ஐ.வி.டி.பி நிறுவனத்தின் வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் நீங்கள் வழங்கும் அர்ப்பணிப்பு மற்றும் ஒத்துழைப்பு மிகப் பெரிது. நமது நிறுவனத்தின் உதவியுடன் நீங்கள் ஒவ்வொருவரும் தன்னம்பிக்கையுடன் முன்னேறுவதுடன் உங்கள் குடும்பத்தையும், இச்சமூகத்தையும் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்கிறீர்கள் என்பது பெருமைக்குரியது.

ஐ.வி.டி.பி சுய உதவிக் குழுக்கள் என்பது வெறும் சேமிப்பு மற்றும் கடன் அமைப்புகள் அல்ல. அவை பெண்களின் ஆற்றலையும், ஒற்றுமையையும், பொருளாதார சூழ்நிலையையும் உயர்த்தும் சக்தி ஆகும். ஆகவே ஒவ்வொரு குழுவின் ஊக்குநர்களும், உறுப்பினர்களும் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி தங்கள் குழுவினைச் சிறப்பான முறையில் வழிநடத்த வேண்டும்.

மேலும், மக்கள் பணியில் 50 ஆண்டுகால சேவையை நினைவுப்படுத்தும் வகையில் நான் முதன்முதலாக மக்கள் பணியை துவங்கிய இடமான, நாட்றாம்பாளையம் **சேசுராஜபுரத்தில்** உள்ள ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்களை ஒருங்கிணைத்து, அவர்களுக்கென **ரூ.54 இலட்சம்** செலவில் சொந்த அலுவலகக் கட்டிடத்தை உருவாக்கி தனி வங்கி வசதியளிக்கும் திட்டம் பல்வேறு தடங்கல்களை தாண்டி நிறைவு பெற்றுள்ளது. இதை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு, நம் குழுக்களின் தரத்தையும், நம் பணிகளையும் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டியது நம் அனைவரின் கடமையாகும்.

கடந்த 3 ஆண்டுகளில் மும்பையைச் சார்ந்த **கார்கினோஸ்** மற்றும் **பெங்களூர் செயின்ட் ஜான்ஸ்** மருத்துவமனைகளோடு இணைந்து, அக்டோபர் 2025 வரை நமது ஐ.வி.டி.பி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட மார்பகம், கர்ப்பப்பை மற்றும் கருப்பைவாய் புற்றுநோய்களை கண்டறியும் பரிசோதனை முகாம்களுக்காக **ரூ.4.15 கோடியும்**, பிரச்சனை இருப்பதாக கண்டறியப்படும் மகளிருக்கு, பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனையில் இலவச புற்றுநோய் உயர் சிகிச்சை வழங்குவதற்காக **ரூ.6.41 கோடி** என மொத்தம் **ரூ.10.56 கோடியை** செலவிட்டு, நம் உறுப்பினர்களின் உயிர்காக்கும் உன்னத பணியை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**கல்வியால் மட்டுமே இச்சமூகத்தை மேன்மேலும் உயர்த்த முடியும் என்ற நோக்கில்** அரசு பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண்களைப் பெறக்கூடிய வகையில் "**வெற்றி நம் கையில்**" வினாவிடை கையேட்டினை **ரூ.50இலட்சம்** செலவில் வெளியிட்டிருக்கிறோம். இதை நன்முறையில் பயன்படுத்தி தங்கள் குழந்தைகளை கல்வியில் சிறக்கச் செய்து, அவர்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருங்கள்.

ஐ.வி.டி.பி நிறுவனத்தின் தொழிற்பயிற்சி மையத்தில் துவங்கப்பட்டுள்ள தையற்பயிற்சி மற்றும் மற்றும் கணினிப் பயிற்சி வகுப்புகள் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. இவ்வகுப்புகள் உங்கள் வாழ்வினை மேம்படுத்திக் கொள்ள உறுதுணையாக இருக்கும் என நம்புகிறேன். உறுப்பினர்களுக்கும், அவர்களின் பெண் குழந்தைகளுக்கும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் இப்பயிற்சி வகுப்புகளில் பங்கேற்று தங்களின் திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள்.

ஒரு பெண் முன்னேறினால், ஒரு குடும்பம் வளர்கிறது. ஒரு குடும்பம் வளர்ந்தால், ஒரு சமூகம் வளம் பெறுகிறது என்ற உண்மையை நம் செயலால் நிரூபிப்போம்.

**உங்கள் உழைப்பும் ஒற்றுமையும் தான் ஐ.வி.டி.பி நிறுவனத்தின் ஆணிவேரும் வலிமையும் ஆகும்.**

*"நம்பிக்கையுடன் செயல்படுங்கள்! உங்களின் எதிர்காலம் சிறக்க என்னுடைய வாழ்த்துகளும் ஆசிகளும்!"*

*நன்றி*

குழந்தை பிரான்சிஸ்

உள்ளே — உறுப்பினர்களுக்கு முக்கிய செய்தி - பக்கம் எண். 14 முதல் 17 வரை தவறாமல் பார்க்கவும்.

IVDP
SINCE 1979

# ஐ.வி.டி.பி.



# கோசலை விருது - 2025



ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் **1561** மாணவர்களுக்கு **மடிக்கணினி** மற்றும் **தங்கப் பதக்க** விருது

**₹ 1.52 கோடி**



ஐ.வி.டி.பி நிறுவனத்தின் மூலம், மகளிர் சுய உதவிக்குழுக்களில் உள்ள உறுப்பினர்களின் குழந்தைகள் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவதை ஊக்குவிக்கும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் ஐ.வி.டி.பி கோசலை விருது வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாண்டின் கோசலை விருது வழங்கும் விழா 24.08.2025 அன்று கிருஷ்ணகிரி, R.C பாத்திமா ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு தலைமையேற்ற கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. **தினேஷ்குமார், இ.ஆ.ப.,** அவர்கள் மாணவர்கள் விடா முயற்சியோடு கல்விகற்று இன்னும் உயர்ந்த நிலைக்கு தங்களை தகுதியாக்கிக் கொள்ள வேண்டுமென வலியுறுத்தி, 10 மற்றும் 12 வகுப்புகளில் முதல் இடம் பிடித்த மாணவ மாணவியருக்கு, தங்கப் பதக்கம் மற்றும் மடிக் கணினிகளை வழங்கி பாராட்டினார். ஆசிரியர் திரு. நிமலன் அவர்கள் தனது ஊக்க உரையின் மூலம் மாணவ மாணவியர் தங்களது எதிர்காலத்தை எவ்வாறு திட்டமிட வேண்டும் என்பது குறித்து சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் 10ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் சிறப்பிடம் பெற்ற 5 மாணவ மாணவியருக்கு தலா **ரூ.38,100/-** மதிப்பிலான 4 கிராம் தங்க நாணயங்களும், 12ஆம் வகுப்பு அரசுபொதுத் தேர்வில் சிறப்பிடம் பெற்ற 6 மாணவர்களுக்கு தலா. **ரூ.47,031/-** மதிப்பிலான மடிக்கணினிகளும் வழங்கப்பட்டது.






மேலும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 90%க்கு மேல் மதிப்பெண்கள் பெற்ற **1550** மாணவ மாணவியருக்கு தலா. **ரூ.9525/-** மதிப்பிலான **1 கிராம் தங்க நாணயங்கள்** விருதாக வழங்கப்பட்டது. மொத்தம் **1561** மாணவ மாணவியருக்கு வழங்கப்பட்ட பரிசுகளின் மொத்த மதிப்பு **ரூ. 1.52 கோடி** ஆகும்.

**இதுவரை ஐ.வி.டி.பி கோசலை விருது திட்டத்திற்காக மட்டும் ரூ. 7.11 கோடி வழங்கப்பட்டுள்ளது.**



₹ 25.80 இலட்சம்

# 79 வது நிறுவனர் தின விழா

**மாற்றத்திற்கான மகளிர் பணியில்** ஈடுபட்டு வரும் ஐ.வி.டி.பி நிறுவனம், தனது **79 வது நிறுவனர் தின விழாவை** யும் அதன் நிறுவனத் தலைவர்

10 செப்டம்பர் 2025

**இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் தனது பொது வாழ்வை துவங்கியதன் 50 ஆண்டுகள் பொன் விழாவையும் கடந்த செப்டம்பர் 10 ஆம் தேதி எழுச்சியுடன் சிறப்பித்தது.

1975 ஆம் ஆண்டில் காடு, மலைகளின் நடுவே அக்கால மக்களின் வறுமை, பஞ்சம், இடப்பெயர்ச்சி எனும் சமூக சூழல்கள் மத்தியில் சேசுராசபுரம் எனும் குக்கிராமத்தில் தனது பொதுவாழ்வைத் துவங்கிய ஐ.வி.டி.பி தலைவர் தற்போதும் அதே உற்சாகத்தோடும், உணர்வோடும் தனது மக்கள் பணியில் 50 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். இவ்விரு நிகழ்வுகளையொட்டி நடைபெற்ற விழாவில் பலரும் பங்கேற்று நிறுவனத்தை வாழ்த்த, கலை நிகழ்ச்சிகள், போட்டிகள், நலத்திட்ட உதவிகள் வழங்குதல், பணியாளர்களுக்கான செயல்திறன் பரிசுகள், அறுசுவை உணவு என அந்நாள் ஒரு சிறப்பு மிக்க நாளாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பணியாளர்களுக்கு பல்வேறு வகையில் வழங்கப்பட்ட ஊக்கப்பரிசுகளின் மொத்த மதிப்பு **ரூ. 25.80 இலட்சம்**



ஐ.வி.டி.பி பணியாளர்களில் சிறப்பான முறையில் பணியாற்றிய **90 பணியாளர்களுக்கு**, அவர்களின் ஒரு மாத ஊதியம் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது.

**ரூ. 9.05 இலட்சம்.**

# மக்கள் பணியில்

# 50 ஆண்டுகள்

1975 - 2025

# பொன் விழா



ஐ.வி.டி.பி பணியாளர்களில் 10 வருடங்களுக்கு மேல் பணியாற்றி, தங்கள் கணவரை இழந்த பாலக்கோடு 1 கிளை, **ரூபினி** மற்றும் கிருஷ்ணகிரி 4 கிளை, **கலைவாணி** எனும் 2 பணியாளர்களுக்கு தலா **ரூ.2 இலட்சம்,** 7 வருடங்களுக்கு மேல் பணியாற்றிய காவேரிப்பட்டிணம் 1 கிளையின் **சத்யா** எனும் பணியாளருக்கு தலா. **ரூ.1.50 இலட்சம்** என மொத்தம் **ரூ. 5.50 இலட்சம்**





இதுவரை பணியாளர்களின் நலனிற்காக ஐ.வி.டி.பி வழங்கிய மொத்தத் தொகை **ரூ.10.32 கோடி**

- தங்கள் கணவரை இழந்த 5 பணியாளர்களுக்கு ஈமச்சடங்கிற்காக தலா ரூ.20,000/- உதவித்தொகை **ரூ.1 இலட்சம்**
- அரசு பள்ளியில் படித்து நுழைவு தேர்வில் தேர்ச்சி பெற்று மருத்துவப் படிப்பில் சேர்ந்து இருக்கும் அரசம்பட்டி கிளையின் பணியாளர் அனுராதா அவர்களின் மகன் யாழ் இனியன் எனும் மாணவனுக்கு ஊக்கத்தொகை **ரூ.20 ஆயிரம்.**
- நிறுவனர் தின விழாவில் கலை நிகழ்ச்சியில் பங்கேற்று வெற்றி பெற்ற பணியாளர்களுக்கு பரிசுத்தொகை **ரூ.1.55 இலட்சம்.**
- ஐ.வி.டி.பி யின் 600 பணியாளர்களுக்கு உணவு மற்றும் கேக்குகள் **ரூ.4.45 இலட்சம்.**
- ஐ.வி.டி.பி யின் 600 பணியாளர்களுக்கு சீருடைகள் **ரூ.2.39 இலட்சம்.**
- இதுதவிர பணியாளர்கள் குழந்தைகளின் கல்வி மற்றும் திருமணத்திற்கு உதவித்தொகை **ரூ.1.66 இலட்சம்.**



## ஐ.வி.டி.பி உறுப்பினர்களுக்கான
# ஆரம்பநிலை புற்றுநோய் கண்டறிதல் மற்றும் இலவச புற்றுநோய் மருத்துவச் சிகிச்சைத் திட்டம்



ஐ.வி.டி.பி நிறுவனம், மக்களின் நலன் கருதி புற்றுநோய் பரிசோதனை மற்றும் இலவச உயர்சிகிச்சைத் திட்டத்தை மேலும் 2 ஆண்டுகள் தொடர 16.06.2025 அன்று பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் கிருஷ்ணகிரி செயின்ட் லூயிஸ் மருத்துவமனைகளோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.

1. ஐ.வி.டி.பி உறுப்பினர்களுக்கான ஆரம்பநிலை புற்றுநோய் கண்டறிதல் மற்றும் இலவச புற்றுநோய் மருத்துவச் சிகிச்சை திட்டமானது நாட்டின் சிறந்த மருத்துவமனைகளில் ஒன்றான பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனையின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. உயிர்க்கொல்லி நோயான புற்றுநோய் ஒரு குடும்பத்தையே புரட்டிப் போடக் கூடியது. அந்நோய் வந்தால் குடும்ப பொருளாதாரத்திற்கும் உயிருக்கும் உத்திரவாதம் இல்லை என்பது நாம் அறிந்ததே. புற்று நோய் இல்லா மகளிர் வாழ்வு மலர ஐ.வி.டி.பி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட திட்டமே ஐ.வி.டி.பி. உறுப்பினர்களுக்கான ஆரம்பநிலை புற்று நோய் கண்டறிதல் மற்றும் இலவச புற்றுநோய் மருத்துவச் சிகிச்சை திட்டமாகும்.

3. இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் ஐ.வி.டி.பி உறுப்பினர்களுக்கு புற்றுநோய் அறிகுறிகள் இருப்பதை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து அதற்குரிய சரியான சிகிச்சையை உரிய நேரத்தில் அளித்து உறுப்பினரை புற்றுநோயிலிருந்து காப்பாற்றுவதே ஆகும்.

4. இத்திட்டம் துவங்கப்பட்ட 2 ஆண்டுகள் கடந்த நிலையில் ஆரம்ப நிலை புற்றுநோய் பரிசோதனை மேற்கொள்ள உறுப்பினர்களைக் கட்டாயப்படுத்தும் சூழ்நிலை நிலவுகிறது. ஆரம்ப நிலையிலேயே தங்களை பரிசோதித்து கொள்ளாமல் நோய் முற்றிய நிலையில் சிகிச்சைக்கு வரும் நிலையை தவிர்க்க வேண்டும்.

5. புற்றுநோய் தொடர்பான பரிசோதனை மற்றும் சிகிச்சைகள் குறித்து உறுப்பினர்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால் உடனடியாக ஐ.வி.டி.பி நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளவும்.

## பரிசோதனைக்கு வருபவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை :

- உறுப்பினர் குழுவில் சேர்ந்து 3 வருடம் முடிவடைந்திருக்க வேண்டும்.
- பரிசோதனைக்கு வரும்போது ஆதார் அட்டை மற்றும் குழுவின் தனிநபர் சேமிப்பு புத்தகம் கொண்டு வருவது அவசியம்.
- பரிசோதனைக்கு வரும்போது சேலை அணிந்து வரவும்.
- பரிசோதனைமுகாமில் கலந்து கொள்பவர்கள் 60 வயதிற்கு உட்பட்டவர்களாக இருப்பது அவசியம்.
- ஆரம்ப நிலை புற்றுநோய் கண்டறியும் முகாம் அனைத்து வேலை நாட்களிலும் கிருஷ்ணகிரி புனித லூயிஸ் மருத்துவமனையில் நடைபெற்று வருகிறது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி உடனடியாக அனைவரும் பரிசோதனை முகாமில் கலந்துக் கொண்டு தங்களைப் பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ளவும்.

## மருத்துவ உயர் சிகிச்சையில் கலந்துகொள்பவர்களின் கவனத்திற்கு

- புற்றுநோய் மருத்துவ உயர் சிகிச்சை **பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனையில்** வழங்கப்படுகிறது. அறுவைச் சிகிச்சை, கதிரியக்க சிகிச்சை, மருந்து மற்றும் ஆய்வகச் செலவுகள் அனைத்தும் ஐ.வி.டி.பி நிறுவனமே ஏற்றுக்கொள்கிறது.
- சிகிச்சையின் போது நோயாளிக்கும் உடன் தங்குவோர்க்கும் மருத்துவமனையிலேயே, இலவச உணவு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- சிகிச்சைப் பெறும் உறுப்பினர் குழுவிற்கு தொடர்ந்து கலந்து கொள்பவராக இருக்க வேண்டும்.
- சிகிச்சைக்கு வரும் போதும், சிகிச்சை முடிந்த பின்னரும் குழுவில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.
- சிகிச்சை பெறவிருக்கும் உறுப்பினருக்கு குழுவில் எவ்வித **Overdue or late payment** இருக்கக் கூடாது.
- உறுப்பினர்களிடம் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை புற்றுநோய் காணப்பட்டால் சிகிச்சை அளிப்பது எளிது. நோயும் விரைவில் குணமடையும். உறுப்பினரால் சிகிச்சையைத் தாங்கிக் கொள்ள உடலில் வலு இருக்கும்.
- அதே சமயம் சிகிச்சையை இடையிலேயே நிறுத்தினால் தொடர்ந்து ஐ.வி.டி.பி.நிறுவனத்தால் சிகிச்சை அளிக்க இயலாது.
- ஒவ்வொரு முறை **பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனைக்கு** செல்லும் போதும் ஐ.வி.டி.பி நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு அனுமதி கடிதம் பெற்றுச் செல்வது அவசியம்.

## ஜனவரி 2023 முதல் அக்டோபர் 2025 வரை பரிசோதனை முகாமில் பங்கேற்று அனைத்து நிலைகளிலும் சிகிச்சைப் பெற்றவர்களின் விவரம்

ஆரம்பநிலை புற்றுநோய் பரிசோதனை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை : 30461

HPV POSITIVE கண்டறியப்பட்டவர்கள் எண்ணிக்கை : 1907

COLPOSCOPY சிகிச்சை மேற்கொண்டோர் : 1294

HYSTECTOMY (கர்ப்பப்பை அகற்றுதல்) சிகிச்சைப் பெற்றோர் : 104

THERMALABLATION, CONE BIOPSY சிகிச்சைப் பெற்றவர்கள் : 278

மார்பகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டோர் : 21049

மார்பக Mammogram ,FNAC பரிசோதனை மேற்கொண்டோர் : 515

மார்பகப் புற்றுநோய் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டோர் : 51

கதிரியக்க & கீமோதெரபி (Chemotherapy) சிகிச்சைப் பெற்றோர் : 278

PET SCAN எடுத்தவர்கள் : 87

GENITIC TEST மேற்கொண்டோர் : 10

ABDOMEN மற்றும் BREAST SCAN எடுத்தவர்கள் : 1594

புற்றுநோய் அல்லாத பொது சிகிச்சைப் பெற்றோர் 58

தைராய்டு கட்டி நீக்கும் சிகிச்சைப் பெற்றோர் : 19

ரோபோட்டிக் அறுவை சிகிச்சைப் பெற்றோர் : 29

உறுப்பினர்களின் பெண் குழந்தைகள் சிகிச்சைப் பெற்றோர் எண்ணிக்கை : 24



**ரோபோட்டிக் அறுவை சிகிச்சையின் நன்மைகள்**

- ✓ அதிக நுண்ணியத்துடன் அறுவை சிகிச்சை செய்ய முடியும்.
- ✓ சிறிய வெட்டுகள் மட்டுமே என்பதால் வலி குறைவு.
- ✓ ரத்த இழப்பு மிகக் குறைவாக இருக்கும்.
- ✓ காயங்கள் ஏதுமின்றி, நோயாளி விரைவாக குணமடைவார்.
- ✓ அறுவை சிகிச்சைக்கு பின் சிக்கல்கள் குறைவு.

| விவரம் | 2023 – மார்ச் 2025 வரை | ஏப்ரல் 2025 – அக்டோபர் 2025 வரை | மொத்தம் | |
|---|---|---|---|---|
| ஆரம்ப நிலைபுற்று நோய் பரிசோதனை | ₹3.18 கோடி | ₹0.97 இலட்சம் | ₹ 4.15 கோடி | ₹ 10.56 கோடி |
| புற்றுநோய் உயர் சிகிச்சை | ₹4.28 கோடி | ₹2.13 கோடி | ₹ 6.41 கோடி | |

**குறிப்பு :** புற்றுநோய் சிகிச்சை பெறும் உறுப்பினரின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வருவதால் இனிவரும் காலங்களில் அறுவை சிகிச்சைக்கு தேவையான இரத்ததானத்தை உறுப்பினரின் நெருங்கிய உறவினர்கள் வழங்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

## ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பெண் குழந்தைகளுக்கான கணினிப் பயிற்சி

₹ **19.74** இலட்சம்





ஐ.வி.டி.பி நிறுவனம் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கும், அவர்களின் பெண் குழந்தைகளுக்கும் தொழில்நுட்பத்தை புரிந்து கொண்டு அது மூலம் வேலை வாய்ப்புகளை பெற வழிவகுக்கும் வகையில் ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்கள் தொழிற்பயிற்சி மையத்தில், புதிய கணினிப் பயிற்சி மையத்தை உருவாக்கி, கடந்த செப்டம்பர் 1 ஆம் தேதி திறப்பு விழா நடைபெற்றது. முதல் கட்ட வகுப்புகளில் **21 உறுப்பினர்கள்** மற்றும் **14** உறுப்பினர்களின் **பெண் குழந்தைகள்** பங்கேற்று பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளனர். தற்போது இரண்டாம் கட்ட வகுப்புகள் துவங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

### கணினிப் பயிற்சியில் இரண்டாம் கட்ட பயிற்சியில் பங்கேற்றுள்ள

- சுய உதவிக்குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை : **18**
- சுய உதவிக்குழு உறுப்பினர்களின் பெண் குழந்தைகள் எண்ணிக்கை : **14**

இதுவரை கணினி ஆய்வகம் மற்றும் தளவாடப் பொருட்களுக்காக
ஐ.வி.டி.பி செலவிட்டுள்ள தொகை **ரூ.19.74 இலட்சம்**

## ஐ.வி.டி.பி யின் முன்னாள் ஓட்டுநர் இறப்பிற்கு நிதியுதவி

₹ **10** இலட்சம்

ஐ.வி.டி.பி நிறுவனத்தில் கடந்த 26 ஆண்டுகளாக ஓட்டுநராக பணியாற்றி ஓய்வுபெற்ற திரு. எலியாஸ் அவர்கள், நோய்வாய்ப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். ஐ.வி.டி.பி நிறுவனத்தில் பணியிலிருந்து விலகி 6 ஆண்டுகள் ஆனாலும், அவரது குடும்பத்தாரின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு ஐ.வி.டி.பி நிறுவனர் இராமன் மகசேசே **திரு. குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் ரூ.10 இலட்சத்தை நிதியுதவியாக வழங்கி, அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்.





**திரு. எலியாஸ்** அவர்களின் உழைப்பு
எங்களது மனங்களில் என்றும் நிலைத்திருக்கும்
அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கிறோம்.

## ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு தையற்பயிற்சி மற்றும் ஆரி வேலைபாடு சிறப்பு பயிற்சி வகுப்புகள் [ஏப்ரல் முதல் அக்டோபர் வரை]

**ரூ. 1.27 இலட்சம்**





ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் தொழில் திறனை மேம்படுத்தும் விதமாக ஐ.வி.டி.பி நிறுவனத்தின் தொழிற்பயிற்சி மையத்தில் இதுவரை நடைபெற்ற 24 வது கட்டப் பயிற்சிகளில் 664 பேர் பயிற்சியை நிறைவு செய்த நிலையில், தற்போது நடைபெற்று வரும் 25 ஆம் கட்ட அடிப்படைப் பயிற்சியில் 30 பேரும், சிறப்பு பயிற்சி வகுப்பான (ஆரிவேலைபாடுகள்) தையற்பயிற்சியில் 16வது கட்டப் பயிற்சிகளில் 303 பேர் பயிற்சியை நிறைவு செய்துள்ள நிலையில் தற்போது 17 வது கட்டப் பயிற்சியில் 16 பேர் சிறப்பு தையற்பயிற்சி (ஆரி வேலைபாடுகள்) பெற்று வருகின்றனர்.

இப்பயிற்சி வகுப்பிற்காக ஏப்ரல் முதல் அக்டோபர் வரை ஐ.வி.டி.பி நிறுவனம் செலவிட்டத் தொகை ரூ. 1.27 இலட்சம்.

**இதுவரை தையற் பயிற்சிகளுக்காக செலவிடப்பட்ட தொகை ரூ.9.60 இலட்சம்**

## வடகிழக்கு மாநிலப் பள்ளிகளுக்கு ஐ.வி.டி.பி யின் கல்விப் பணிகள்

**ரூ. 6.90 இலட்சம்**




மேகாலயா மாநிலத்தில், மக்கன்ரு கிராமத்தில் செயல்படும் ஹோலி கிராஸ் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியரின் கற்றல் திறனை ஊக்குவிக்கும் பொருட்டு,

- அப்பள்ளிக்கு 1275 நூலகப் புத்தகங்கள் ரூ.2.62 இலட்சம்
- கற்றல் தொழில்நுட்பத்தினை மேம்படுத்தும் வகையில் 1 இன்ட்ராக்டிவ் போர்டு. ரூ.82 ஆயிரம்
- அப்பள்ளியில் பணியாற்றும் 30 பணியாளர்களுக்கு டின்னர் செட்டுகள் ரூ.2.64 இலட்சம்



மேகாலயா மாநிலத்தில் செயல்படும் குட் செப்பர்டு மேல்நிலைப் பள்ளியின் மாணவர்களுக்கு உதவிடும் வகையில் 1 இன்ட்ராக்டிவ் போர்டு. ரூ. 82 ஆயிரம்

**இவற்றின் மொத்த மதிப்பு ரூ. 6.90 இலட்சம்**

**இதுவரை வடகிழக்கு மாநிலப் பள்ளிகளுக்கு ஐ.வி.டி.பி வழங்கிய கல்விப் பணியின் மொத்த மதிப்பு ரூ. 1.17 கோடி**

# ஐ.வி.டி.பி யில் தீபாவளி திருவிழா

ரூ. 21.92 இலட்சம்

**"ஒளி, ஒற்றுமை, ஒழுக்கம்**

**தீபாவளியின் உண்மையான அர்த்தம்!"**

சமூகத்திலும், நம் மனங்களிலும் வாழ்வில் ஒளி நிலைத்திருக்கும் வகையில் பாரம்பரிய சிறப்புடன் தீபாவளி திருவிழா ஐ.வி.டி.பி யில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் ஐ.வி.டி.பி யின் பணியாளர்களுக்கு ஊக்கப்பரிசுகள், இனிப்புகள், உணவுப்பொருட்கள் தொகுப்பு என மொத்தம் **ரூ. 18.85 இலட்சம்** மதிப்பிலான தீபாவளி பரிசுகள் வழங்கப்பட்டது.





பெங்களூர், **செயின்ட் ஜான்ஸ்** மருத்துவமனையின் பணியாளர்கள், கிருஷ்ணகிரி புனித லூயிஸ் மருத்துவமனை பணியாளர்கள் மற்றும் கிருஷ்ணகிரி **புனித அன்னாள்** மகளிர் மேல்நிலைப் பள்ளியின் ஆசிரியர்களும் தீபாவளியைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் **ரூ. 3.07 இலட்சம்** மதிப்பிலான இனிப்புகளை வழங்கி தனது தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார் ஐ.வி.டி.பி நிறுவனத்தலைவர்.

## கிருஷ்ணகிரி நகராட்சி நடுநிலைப் பள்ளிக்கு பீரோக்கள்

ரூ.33 ஆயிரம்



கிருஷ்ணகிரியில் இராசி வீதியில் செயல்படும் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி, பள்ளி நிர்வாகத்தின் கோப்புகளைப் பராமரிக்கும் பொருட்டு **ரூ. 33450/-** மதிப்பிலான **3** பீரோக்களை வழங்கி உதவினார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்.

## ஓய்வுபெற்ற வருவாய்த் துறை அலுவலரைப் பாராட்டி தங்க நாணயம்

ரூ.9 ஆயிரம்

தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற பணியாளர்களில் 80 வயது பூர்த்தியடைந்த பணியாளரைப் பாராட்டும் வகையில் தலா **ரூ.9525/-** மதிப்பிலான **1 கிராம் தங்க நாணயம்** வழங்கி கௌரவித்தார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்.



# 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு ஐ.வி.டி.பி யின்

# வெற்றி நம் கையில்

தமிழ் மற்றும் ஆங்கிலம்

வினா – விடை கையேடு

இலவச வெளியீடு

₹ 50 இலட்சம்





கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அரசுபள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர் சிறப்புடன் கல்வி பயிலவும், நம்பிக்கையோடு தங்களது 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வை எதிர்கொள்ளவும், மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்கவும் ஐ.வி.டி.பி நிறுவனம் சிறந்த அனுபவம் வாய்ந்த அரசு அதிகாரிகளைக் கொண்டு தமிழ், ஆங்கிலம் "வெற்றி நம் கையில்" எனும் வினாவிடை தொகுப்பு நூலைத் தயாரித்து அனைத்து அரசுப்பள்ளிகளுக்கும் இலவசமாக வழங்கி வருகிறது நம் ஐ.வி.டி.பி நிறுவனம்.

அவ்வகையில் இவ்வாண்டும் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியருக்காக, ஐ.வி.டி.பி நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட தமிழ் வழி மற்றும் ஆங்கில வழியிலான "வெற்றி நம் கையில்' வினா விடை கையேட்டை, ஐ.வி.டி.பி நிறுவனர் தலைமையில் நடைபெற்ற விழாவில் மாவட்ட ஆட்சியர் திரு. தினேஷ்குமார் இ.ஆ.ப அவர்கள் வெளியிட, அரசு பள்ளி மாணவர்கள் பெற்றுக் கொண்டனர். பின் அக்கையேடு அனைத்து பள்ளி மாணவ மாணவியருக்கும் இலவசமாக விநியோகிக்கப்பட்டது. இவற்றின் மொத்த மதிப்பு ரூ. **50 இலட்சம்** ஆகும்.

**இதுவரை வெற்றி நம் கையில் வினா விடை கையேட்டிற்காக ஐ.வி.டி.பி செலவிட்ட தொகை**

**ரூ. 5.35 கோடி**

# ஐ.வி.டி.பி ஊக்குநர்கள் மற்றும் உறுப்பினர்களின் முக்கிய கவனத்திற்கு

- ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழு ஊக்குநர்கள் அனைவரும் தனித்திறன் வாய்ந்தவர்களாக செயல்படுவதில் வல்லவர்கள். ஆகவே தங்களது குழுவைத் தாங்களே எவ்வாறு திறம்பட வழிநடத்த வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவே இவ்வாண்டு நோட்டீஸ், தீர்மானப்புத்தகம், ஊக்குநர் கையேடு ஆகியவை வடிவமைத்து கொடுக்கப்பட்டுள்ளன.

- ஐ.வி.டி.பி நிறுவனத்தால் வழங்கப்படும் நோட்டீஸ், தீர்மானப்புத்தகம், ஊக்குநர் கையேடு போன்ற ஆவணங்கள் ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு மற்றும் உறுப்பினர்களின் பயன்பாட்டிற்காக மட்டுமே வழங்கப்படுகிறது. இந்த ஆவணங்களை மற்ற வெளியாட்கள் பயன்படுத்த அனுமதிப்பது சட்டப்படி குற்றமாகும். இந்த செயற்பாட்டைத் தவிர்க்கவும்

## 2025 - 2026 ஆம் ஆண்டு தீர்மானப் புத்தகத்தில் உள்ளடங்கியுள்ள புதிய சாராம்சங்கள்

1. தணிக்கை முடிவுகளின் அடிப்படையில் குழு மற்றும் ஊக்குநருக்கான தரநிலைகள் (Grading) ஊக்குநரின் பொறுப்புகள் மற்றும் சிறந்த குழுக்களாக செயல்படுவதற்கான வழிமுறைகளை உள்ளடக்கியதாகும். அதை உணர்ந்து ஊக்குநர்கள் அனைத்து பணிகளையும் உடனுக்குடன் முடிக்க அறிவுறுத்தப்படுகிறது.
2. குழுக்களின் தனிநபர் சேமிப்பு மற்றும் கடன்களை உறுதிப்படுத்துவதற்கான தனிப்பக்கங்கள்.
3. **உள்தணிக்கை பக்கங்கள் :** உள்தணிக்கை பக்கங்களில் ஒவ்வொரு 3 மாத வரவு, செலவுகள் மற்றும் சுகாதாரப் பொருட்கள் பெற்றுக் கொண்டதற்கான படிவங்களை சரியாக பூர்த்தி செய்வதன் மூலம் குழுக்களில் ஏற்படும் குழப்பங்களை உடனுக்குடன் சரி செய்யலாம்.
4. Acquitance Verification : Acquitance பக்கங்களில் ஒவ்வொரு பணப்பரிவர்த்தனைகளின் போதும், சுகாதாரப் பொருட்கள் பெற்றுக் கொள்ளும் போதும் கையொப்பமிட்டு கைரேகை பதிவு செய்தல் அவசியம்.பொருள் பெற்றுக் கொண்டதற்கான படிவங்களை சரியாக பூர்த்தி செய்வதன் மூலம் குழுக்களில் ஏற்படும் குழப்பங்களைத் தவிர்க்கலாம்.
5. Bank loan closing தீர்மானம் : மினிட்டில் வங்கிக் கடன் closing றிகென ஒதுக்கப்பட்ட பக்கத்தின் தீர்மானம் மற்றும் வழிமுறையினைப் பின்பற்றும் போது, உறுப்பினர்களிடம் தேவையின்றி அதிகமாக வசூலிக்கும் சூழ்நிலையைத் தவிர்க்கலாம்.
6. Bank loan Appraisal தீர்மானம் : இப்பக்கத்தில் ஊக்குநர் உட்பட குழுவை சேர்ந்த யாரும் எழுதக் கூடாது. Appraisal வருபவர்கள் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
7. IVDP loan மீதங்கள் சரிபார்க்கும் வழிமுறைகள் : இப்பக்கத்தில் உள்ள தகவல்களின் அடிப்படையில் ஐ.வி.டி.பி கடன் குறித்த விவரங்களை ஊக்குநர்கள் மற்றும் உறுப்பினர்கள் நேரடியாக தலைமை அலுவலகத்தைத் தொடர்புக் கொண்டு அறிந்துக் கொள்ளலாம்.
8. வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி பங்களிப்பு நிதியை மாற்றம் செய்வதற்கான தீர்மானம் : இப்பக்கத்தில் உள்ள தீர்மானத்தை முறையாக பயன்படுத்தினால் பழைய உறுப்பினர் மற்றும் புதிய உறுப்பினரின் எண்ணிக்கைக்கு தகுந்தவாறு சரியான பாதுகாப்பு நிதி தொகையை ஐ.வி.டி.பி யின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை கணக்கிற்கு மாற்றம் செய்ய முடியும்.
9. பயிற்சிக்கென ஒதுக்கப்பட்ட பகுதி : இப்பக்கத்தில் பயிற்சியின் போது கொடுக்கப்படும் தகவல்கள் மற்றும் Pre Appraisal குறித்த தகவல்களைப் பதிவு செய்ய வேண்டும்.

## TAB பயன்பாட்டின் முக்கியத்துவம் மற்றும் வெளியூரில் உள்ள உறுப்பினர்கள் குழு கூட்டத்தில் கலந்து கொள்வதன் முக்கியத்துவம்.

- குழு உறுப்பினர்கள் குழுவாய் அமர்ந்து குழுக் கூட்டம் நடத்துவது மற்றும் ஒரு உறுப்பினர் வருடத்தில் 6 குழுக் கூட்டங்களிலாவது தனது வருகையைக் கைரேகை மூலம் உறுதிப்படுத்துதல் அவசியம்.

- குழுவின் கடன் மீதங்கள், நிறுவனத்தின் நலத் திட்டங்கள், வங்கிக்கடன் Closing போன்ற அனைத்து செயல்பாடுகளையும் உறுப்பினர்கள் அறிந்து கொண்டதை உறுதிப்படுத்தவே TAB-ல் கைரேகை வைக்கும் வழிமுறை பின்பற்றப்படுகிறது.

## ஊக்குநர் கையேடு உருவாக்கப்பட்டதின் நோக்கமும் பயன்பாடும்

- ஊக்குநர் மற்றும் உறுப்பினர்கள் ஐ.வி.டி.பி பணியாளர்களைச் சார்ந்து செயல்படாமல் தாங்களாகவே வழி நடத்திச் செல்ல உருவாக்கப்பட்ட வழித்துணையே ஊக்குநர் கையேடு.

- குழுவில் நடைபெறும் அனைத்து செயல்பாடுகளுக்கும் மாதிரி தீர்மானப் படிவங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் பின்பற்றி குழுவில் தீர்மானங்களை நிறைவேற்றிக்கொள்ளவும்.

## இறந்த உறுப்பினர் பற்றிய தகவல்களைப் பதிவு செய்யும் வழிமுறைகள்

- குழுவிலிருந்து ஒரு உறுப்பினர் மரணமடைந்தால் உடனடியாக குழுவைச் சேர்ந்த ஊக்குநர்கள் (அ) உறுப்பினர்கள் தங்களது கிளை அலுவலகத்திற்கும், அதைத் தொடர்ந்து தலைமை அலுவலகத்திற்கும் தகவல் கொடுக்க வேண்டும். (தலைமை அலுவலக தொலைப்பேசி எண்கள் - 04343-236420, 04343-232129.
- கிளை அலுவலகப் பணியாளர்கள் மற்றும் CLF பிரதிநிதிகள் ஈமச்சடங்கில் கலந்து கொள்வார்கள்.

## பெற்றுக்கொண்ட சுகாதாரப் பொருட்களின் கடனுக்கான WITHDRAWAL ஒப்படைப்பதில் ஊக்குநருக்கானப் பொறுப்புகள்

- குழு தீர்மானம் மற்றும் ஊக்குநர், பிரதிநிதியின் கையொப்பமின்றி எந்த வித பணப்பரிவர்த்தனைகளும் குழுவில் நடைபெறாது என்பதையும், குழுவில் நடைபெறும் அனைத்து செயல்பாடுகளும் 20 உறுப்பினர்களுக்கும் சொந்தமானவை என்பதையும் ஊக்குநர்கள் மற்றும் உறுப்பினர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.



- ஐ.வி.டி.பி கிளை அலுவலகங்களில் குழுக்கூட்டம் தொடர்பாகவும், சுகாதாரப் பொருட்கள் DD எடுப்பது தொடர்பாகவும் Withdrawal வழங்கும் போது மாதிரி படிவத்தில் உள்ளவாறு எந்த பொருளுக்காக Withdraw கொடுக்கப்பட்டது என்ற விவரத்தையும், எத்தனை பொருட்கள் மற்றும் எவ்வளவு தொகை என்பதையும் எழுதி கொடுப்பது ஊக்குநரின் முழு பொறுப்பாகும்.

# ஐ.வி.டி.பி நிறுவனத்தில் குழுக்களை வழிநடத்துவதில் புதிதாக செயல்படுத்தப்பட்டு வரும் நடைமுறைகள்

- புதிய குழுக்களின் கணக்கு துவங்குவதற்கு முன்பு ஊக்குநர் மற்றும் பிரதிநிதியாக தேர்வு செய்யப்பட்ட நபர்கள் ஐ.வி.டி.பி தலைமை அலுவலகம் வர வேண்டும்.
- புதிய குழுக்களின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதி நேரடியாக தலைமை அலுவலகத்திற்கு வருவதன் மூலம் நிறுவனத்தின் நோக்கம், குறிக்கோள், குழுவை வழிநடத்தும் முறை, கொடுக்கப்படும் பயிற்சிகள், ஊக்குநர் மற்றும் பிரதிநிதியின் பொறுப்புகள் போன்ற தகவல்களை தெளிவாக அறிந்துக் கொள்ள முடியும்.
- **உறுப்பினர் விலகல் மற்றும் குழு விலகுதல் பற்றிய தகவல்கள்**
  - குழுவோ அல்லது உறுப்பினரோ தங்கள் குழுவிலிருந்து விலகும்போது அவர்களின் சேமிப்பு (அ) அவருக்கு சேர வேண்டிய தொகை அவரது தனிநபர் சேமிப்பு கணக்கிற்கு மட்டுமே மாற்றம் செய்யப்படும்.

  **விலகிய குழு உறுப்பினர்கள் மீண்டும் வேறு குழுக்களில் இணைய வாய்ப்பு**

  - சூழ்நிலை காரணமாக விலகும் உறுப்பினர்கள் அருகில் உள்ள ஐ.வி.டி.பி குழுவிலோ (அ) அவர்கள் நிரந்தரமாக குடியிருக்கும் கிராமத்திலுள்ள வேறு ஐ.வி.டி.பி கிளையில் உள்ள குழுக்களிலோ, அந்த குழுக்களின் முழு சம்மதத்துடனும், தீர்மானத்துடனும் ஏற்கனவே குழுவில் இருந்த வருடங்களைக் கணக்கில் கொண்டு தற்போது உள்ள அதே சேமிப்புடன், அனைத்து வகையான கடன்களைப் பெறவும் தேவையான வழிமுறைகள் செய்து தரப்படும்.

# களப்பணியாளர்கள் குழுவில் கலந்து கொள்வதை உறுதிப்படுத்த TRACKING SYSTEM அறிமுகம்




- ஐ.வி.டி.பி நிறுவனமானது குழுக்களைத் திறம்பட செயல்படுத்துவதில் உள்ள பணியாளர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அவர்கள் குழுவில் கலந்து கொள்வதையும் நிறுவனத்தின் நோக்கங்களைச் செயல்படுத்துவதையும் கண்காணிக்கும் பொருட்டு Tracking system அறிமுகப்படுத்தவுள்ளது.
- அந்தந்த குழுக்களின் தீர்மானப் புத்தகத்தில் முன்பக்கம் பதிவு செய்யப்பட்டுள்ள குழுக் கூட்ட நேரம், களப்பணியாளர் கூட்டத்திற்கு வருகை புரியும் நேரத்தோடு ஒத்திருக்க வேண்டும்.
- இந்த Tracking system முறை பணியாளர்களின் ஊதியத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. குறிக்கப்பட்ட சரியான நேரத்தில் குழுவை நடத்த ஊக்குநர் மற்றும் உறுப்பினர்கள் களப்பணியாளரோடு இணைந்து முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதையும் அறிவுறுத்துகிறோம்.

# ஊக்குநர்கள் மற்றும் உறுப்பினர்களின்

# கனிவான கவனத்திற்கு

## ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழுக்களில் நடைபெறாத குழுக்களின் விவரங்கள் பதிவு செய்தல்

ஒரு குழு நடைபெறவில்லையெனில், அந்த குழுவின் பெயர் மற்றும் அக்குழுவிற்கு தொடர்புடைய அனைத்து விவரங்களையும் அன்றோ அல்லது மறுநாளோ ஐ.வி.டி.பி தலைமை அலுவலகத்திற்கு தொலைபேசி (04343-232129-236420) மூலம் தகவல் தெரிவிக்க வேண்டும்.

நடைபெறாத குழுவின் விவரத்தை உடனடியாக நிறுவனத்திற்கு தெரியப்படுத்துவது ஊக்குநர் மற்றும் தொகுதி அளவு கூட்டமைப்பு பணியாளர்களின் முக்கிய பொறுப்பாகும்.

தலைமை அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்த பின், ஒரு மாத காலத்திற்குள் ஊக்குநர் குழுவின் தீர்மான புத்தகம் மற்றும் வங்கி பாஸ் புத்தகத்துடன் ஐ.வி.டி.பி நிறுவனரை தலைமை அலுவலகத்தில் நேரடியாக சந்திக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் வழங்கப்படும் தகவல்கள் (நடைபெறாத குழுக்களின் விவரங்கள்) தலைமை அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு, ஐ.வி.டி.பி நிறுவனரால் பரிசீலிக்கப்பட்டு, அடுத்த கட்ட நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

சரியான நேரத்தில் பதிவு செய்யப்படாத குழுக்களுக்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் தாமதமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊக்குநர்கள் மற்றும் உறுப்பினர்களின்

# சிறப்பு கவனத்திற்கு




## நலத்திட்டங்கள்

ஐ..வி.டி.பி நிறுவனம் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. அவற்றுள் ஐ.வி.டி.பி யின் உறுப்பினர்களுக்காக செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களான **கோசலை விருது**, விதவை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு **கல்வி உதவித்தொகை, குடிசை தீ விபத்து நிதியுதவி**, சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான **புற்றுநோய் உயர் சிகிச்சை** போன்ற திட்டங்களுக்கு எந்த வகையிலும் கட்டணம் பெறுவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான புற்றுநோய் உயர் சிகிச்சை முற்றிலுமாக ஐ.வி.டி.பி யின் மூலம் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது என்பதை நினைவூட்டுகிறோம்.

## சிறப்பு திட்டங்கள்

ஐ.வி.டி.பி யின் சிறப்பு திட்டங்களான **வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி, இலாபப் பங்கீடு** கணக்கிடுதல் போன்றவையும் ஐ.வி.டி.பி யின் சட்டத்திட்டங்களின் படியே வழங்கப்படுகிறது.




இந்த நலத்திட்டங்களில் பயன்பெறும் உறுப்பினர்களிடம், ஐ.வி.டி.பி நிறுவனம் இதுவரை, நேரடியாகவோ (அ) மறைமுகமாகவோ சேவை கட்டணமாக எந்த வித கட்டணமும், ஐ.வி.டி.பி யின் பணியாளர்கள் மூலமாகவோ மற்றும் ஊக்குநர் மூலமாகவோ வசூலிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆகவே இத்திட்டங்களில் நீங்கள் பயன்பெறும் பொழுது, யாரேனும் சேவை கட்டணம் என்று சொல்லி பணம் வசூலிக்கும் பட்சத்தில், உடனடியாக ஐ.வி.டி.பி தலைமை அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம்.**

**(04343-232129.236420)**

## ஐ.வி.டி.வி நிறுவனர் சிங்கப்பூர் தமிழ்சங்கத்துடன் கலந்தாய்வு









ரூ. 56.23 இலட்சம்

# சேசுராஜபுரம் ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்கள் கூட்டமைப்பு அலுவலகம் & தமிழ்நாடு கிராம வங்கியின் நாட்றாம்பாளையம் கிளை திறப்பு விழா

மக்கள் பணியில் கடந்த 50 ஆண்டுகாலமாக, சமூகத்திற்கு சிறந்த முன்னோடியாகவும், ஓயாமல் உழைக்கின்ற சூரியனைப் போன்றும் விளங்கும் ஐ.வி.டி.பி நிறுவனர் அவர்களின், 1975 முதல் 2025 வரையிலான அரை நூற்றாண்டு சேவை சமூக மாற்றத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி 50 ஆண்டுகளைக் கடந்து வரலாறு படைத்ததின் நினைவாக, இன்று ஏழை மக்களின் கனவுகளை நனவாக்கும் வகையில், **ரூ.54 இலட்சம்** செலவில் **நாட்றாம்பாளையம் சேசுராஜபுரத்தில்** ஒருங்கிணைந்த தமிழ்நாடு கிராம வங்கி வசதியுடன் கூடிய, ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்கள் கூட்டமைப்பு அலுவலகக் கட்டிடம் நிறுவப்பட்டது. இந்த கூட்டமைப்பு அலுவலகக் கட்டிடத்தில் தமிழ்நாடு கிராம வங்கியின் நாட்றாம்பாளையம் கிளை துவங்கப்பட்டு சுய உதவிக்குழு மகளிருக்கு சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

**24.10.2025** அன்று நடைபெற்ற இக்கட்டிடத்தின் திறப்பு விழாவிற்கு தமிழ்நாடு கிராம வங்கியின் தலைவர் **திரு. மணி சுப்ரமணியன்** அவர்கள் தலைமை வகிக்க, வங்கி மேலாளர்கள் மற்றும் சேசுராஜபுரம் கிராம மக்கள் முன்னிலையில் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே **திரு. குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் கூட்டமைப்பு அலுவலகக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.



அலுவலகக் கட்டிடத் திறப்பு விழாவில் கலந்துக் கொண்ட நாட்றாம்பாளைய மகளிர் சுய உதவிக்குழுவைச் சார்ந்த **180** ஊக்குநர்களுக்கு **ரூ.1.54 இலட்சம்** மதிப்பில் ஹாட் பாக்ஸ்களையும், **ரூ. 69 ஆயிரம்** மதிப்பில் சீருடைகளையும் ஊக்கப்பரிசாக வழங்கினார் ஐ.வி.டி.பி நிறுவனர்.

# ஐ.வி.டி.பி நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு திட்டம்

**ரூ. 10 இலட்சம்**

## சின்னேப்பள்ளி ஏரி புணரமைப்பு

தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில், கிருஷ்ணகிரி மாவட்ட ஊராட்சிகளில் 2024–2025 ஆம் ஆண்டுக்கான நீர்வள மேம்பாட்டு திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கிணங்க, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், **கம்மம்பள்ளி** ஊராட்சிக்குட்பட்ட சின்னேப்பள்ளி ஏரியை **ரூ. 10 இலட்சம்** செலவில் புணரமைத்து, நீர் ஆதாரங்களைப் பாதுகாத்து, நிலத்தடி நீரைச் சேமிக்கும் நோக்கிலும், விவசாயத்திற்கான நீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும், ஐ.வி.டி.பி நிறுவனர் இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்களின் முன்னெடுப்பினால், ஐ.வி.டி.பி நிறுவனம் அவ்வேரியின் மறு சீரமைப்பு பணியைக் கடந்த மே மாதம் தொடங்கி ஜீலை மாதம் வரை மேற்கொண்டது.

இத்திட்டத்தின் மூலம் சின்னேப்பள்ளி ஏரியில் புதர் அகற்றுதல், ஏரியின் நடுப்பகுதியை ஆழப்படுத்தி தூர்வாருதல், கரையைப் பலப்படுத்தல், கால்வாய்கள் தூர்வாருதல் போன்ற பல்வேறு பணிகளுடன், ஏரிக்கான நிலத்தில் செய்யப்பட்டிருந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி, ஏரியின் முழு நிலப்பரப்பை கண்டறிந்து எல்லைக்கல் அமைத்தல் போன்ற முக்கிய பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஏரி மறு சீரமைப்பு பணிகள் அனைத்தும் கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், வட்டார வளர்ச்சி அலுவலர் **திரு. உமா சங்கர்** அவர்களின் மேற்பார்வையிலும், **திருமதி. அன்புமணி,** உதவிப்பொறியாளர் அவர்களின் மேற்பார்வையிலும் மற்றும் சின்னேப்பள்ளி கிராமத்தில் செயல்படும் ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஊர் பொதுமக்களின் முழு ஒத்துழைப்போடும் **ரூ.10 இலட்சம்** செலவில் ஐ.வி.டி.பி நிறுவனம் செவ்வனே செய்து முடித்தது. தற்போது தொடர் மழை பெய்து வரும் நிலையில் ஏரிக்கு நீர்வரத்து பெருமளவில் அதிகரித்துள்ளது.



## கோட்டையூர் ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளிக்கு கல்விப் பணிகள்

**ரூ. 26.6 இலட்சம்**

கோட்டையூரில் இயங்கி வரும் ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளியானது ஐ.வி.டி.பி நிறுவனரால் துவங்கப்பட்டு, மலைவாழ் குழந்தைகளுக்கு சிறந்த கல்வி சேவையை வழங்கி வருகிறது. இப்பள்ளிக்கு ஐ.வி.டி.பி நிறுவனம் 2025-2026 கல்வியாண்டும் கீழ்க்கண்ட கல்விச் சேவைகளை வழங்கியுள்ளது.



- 552 மாணவர்களுக்கு ரூ.6.98 இலட்சம் மதிப்பில் பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப்புத்தகங்கள்.
- மாணவர்கள் அமர்ந்து பயில ஏதுவாக ரூ.19.62 இலட்சம் மதிப்பில் இருக்கைகள் மற்றும் டேபிள்கள்.

இதுவரை ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளிக்கு ஐ.வி.டி.பி நிறுவனம் வழங்கிய மொத்த கல்விப் பணியின் மதிப்பு **ரூ. 6.59 கோடி**

## பெற்றோர்களை இழந்த கல்லூரி மாணவ மாணவியருக்கு ஐ.விடி.பி யின் உயர்கல்வி உதவித்தொகை

**ரூ. 13.82 இலட்சம்**




ஐ.வி.டி.பி யின் கல்விப் பணிகளில் முதன்மையானது பெற்றோரை இழந்த கல்லூரி மாணவ மாணவியருக்கு உயர் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டமாகும். அவ்வகையில் பெற்றோர் இருவரையும் இழந்தமாணவர்களுக்கு தலா ரூ.10,000/- பெற்றோரில் ஒருவரை இழந்த மாணவர்களுக்கு தலா ரூ.7,500/- என வழங்கி வருவதோடு, வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக சிறப்பு கல்வி உதவித்தொகையாக தலா ரூ.7500/- என கல்வி உதவித்தொகைகளை வழங்கி வருகிறது ஐ.வி.டி.பி நிறுவனம். அதன்படி

- ★ திருப்பூர், செயின்ட் ஜோசப் கல்லூரியில் பயிலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் 69 மாணவிகள் & பெற்றோரை இழந்த 30 மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை ரூ.7.5 இலட்சம்
- ★ ஒசூர், செயின்ட் ஜோசப் கல்லூரியில் பயிலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் 17 மாணவிகள் & பெற்றோரை இழந்த 66 மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை ரூ.6.32 இலட்சம்

இதுவரை ஐ.வி.டி.பி நிறுவனம் வழங்கிய மொத்த உயர்கல்வி உதவித்தொகை **ரூ. 9 கோடி**

## கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலை கல்லூரிக்கு 1000 நாற்காலிகள்

**ரூ.4.94 இலட்சம்**



கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் பயிலும் மாணவிகள் அமர்ந்து பயில உதவிடும் வகையிலும், கல்லூரியின் கலை விழாக்களில் பயன்படும் நோக்கத்திலும் ஐ.வி.டி.பி நிறுவனம், அக்கல்லூரியின் மாணவிகளின் நலன் கருதி **ரூ.4.94 இலட்சம்** மதிப்பிலான **1000 நாற்காலிகளை** வழங்கி உதவியது.

இதுவரை இக்கல்லூரிக்கு ஐ.வி.டி.பி வழங்கிய கல்விப்பணிகளின் மொத்த மதிப்பு **ரூ.1.20 கோடி**

## பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு இன்ட்ராக்டிவ் போர்டுகள்

**ரூ.17.25 இலட்சம்**

ஐ.வி.டி.பி நிறுவனம், மாணவ மாணவியரின் கற்றல் திறனை ஊக்குவிக்கும் பொருட்டும், இன்றைய டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட கற்றல் அனுபவத்தை வழங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு இன்ட்ராக்டிவ் போர்டுகளை வழங்கி வருகிறது. அதன்படி திருப்பத்தூர், தூய நெஞ்சக் கல்லூரிக்கு ரூ.8.99 இலட்சம் மதிப்பில் 10 இன்ட்ராக்டிவ் போர்டுகளும், திண்டுக்கல், வாக்கம்பட்டி ஹோலி கிராஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிக்கு ரூ.8.26 இலட்சம் 10 இன்டராக்டிவ் போர்டுகளும் வழங்கப்பட்டது.



இதுவரை இன்ட்ராக்டிவ் போர்டுகள் வழங்கியதற்காக ஐ.வி.டி.பி செலவிட்ட தொகை **ரூ.50.38 கோடி**

ரூ. 8.10 இலட்சம்



# ஜவ்வாது மலை, தொன் போஸ்கோ மலைவாழ் இல்லக் குழந்தைகளுக்கு கல்விச் சேவைகள்

ஜவ்வாது மலை, தொன் போஸ்கோ இல்லத்தில் தங்கி பயிலும் மலைவாழ் இல்லக் குழந்தைகளின் நலன் கருதி, படுத்து உறங்குவதற்கு ஏதுவாக, அந்நிறுவனத்தின் சார்பாக 35 இரண்டு அடுக்கு கட்டில்களும், **ஐ.விடி.பி நிறுவனத்தின் பங்களிப்பாக ரூ. 4.27 இலட்சம் மதிப்பிலான 35 இரண்டு அடுக்கு கட்டில்களும் வழங்கப்பட்டது.**

மேலும் அம்மாணவர்களுக்கு **ரூ.54 ஆயிரம்** மதிப்பிலான **120 தலையணைகள்** மற்றும் **போர்வைகள்** ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே **திரு. குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் வழங்கி உதவினார்.

மாணவர்களின் நலன் கருதி, கழிவறை வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் கழிவறை வளாகத்தை சீரமைத்து, அனைத்து வசதிகளையும் கொண்ட நவீன கழிவறைகளை வழங்கி உதவியது. இதன் மொத்த மதிப்பு **ரூ.3.29 இலட்சம்.**



**இதுவரை இம்மேம்பாட்டு சங்கத்திற்காக ஐ.வி.டி.பி செலவிட்ட தொகை**

**ரூ. 8.58 இலட்சம்**

## பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் ஐ.வி.டி.பி உறுப்பினர்களுக்கு இனிப்பு மற்றும் கேக்குகள்

**₹ 3.64 இலட்சம்**

மகளிர் மற்றும் சமூக முன்னேற்றத்திற்காக 50 ஆண்டுகளாக சிறப்பாக பணியாற்றி வரும் ஐ.வி.டி.பி நிறுவனம், ஆசிரியர் தின விழாவை முன்னிட்டும், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் இனிப்பு மற்றும் கேக்குகளை வழங்கியது.





| | |
|---|---|
| கோட்டையூர், ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளியின் 550 மாணவர்களுக்கு | ரூ.47 ஆயிரம் |
| எலத்தகிரி, கொன்சாகா கல்லூரியின் 1350 மாணவியருக்கு | ரூ. 54 ஆயிரம் |
| கீரனூர், தொன் போஸ்கோ இளைஞர் கிராமத்தைச் சார்ந்த 100 மாணவர்களுக்கு | ரூ.4 ஆயிரம் |
| கிருஷ்ணகிரி, புனித அன்னாள் பப்ளிக் பள்ளியின் 550 மாணவ மாணவியருக்கு | ரூ. 22 ஆயிரம் |
| கிருஷ்ணகிரி, ஆர்.சி பாத்திமா ஆண்கள் உயர்நிலைப் பள்ளியின் 2000 மாணவர்களுக்கு | ரூ. 80 ஆயிரம் |
| கிருஷ்ணகிரி, தொன் போஸ்கோ மெட்ரிக் மெல்நிலைப் பள்ளியின் 450 மாணவர்களுக்கு | ரூ. 18 ஆயிரம் |
| கோசலை விருது வழங்கும் விழாவில் பங்கேற்ற 3500 நபர்களுக்கு | ரூ. 1.39 இலட்சம் |

**இதுவரை கேக் மற்றும் இனிப்புகள் வழங்கியதற்காக ஐ.வி.டி.பி நிறுவனம் செலவிடப்பட்ட தொகை** **ரூ.19.32 இலட்சம்**

## கிருஷ்ணகிரி மாவட்ட அரசு பள்ளிகளின் 360 ஆசிரியர்களுக்கு மதிய உணவு

**₹ 56 ஆயிரம்**



பள்ளி கல்வித்துறை சார்பில் 2024 – 2025 ஆம் கல்வியாண்டில் **100%** தேர்ச்சி பெற்ற பள்ளி தலைமையாசிரியர்களைப் பாராட்டும் விழாவில் கலந்துக் கொண்ட கிருஷ்ணகிரி மாவட்ட அரசு பள்ளியைச் சார்ந்த **360** ஆசிரியர்களுக்கு

**ரூ. 56341/-** மதிப்பில் மதிய உணவினை வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.

சேலம், தூய மரியன்னை சமுதாய நல

ரூ. 3.03 இலட்சம்

## நர்சிங் கல்லூரி மாணவிகளுக்கு ஊக்கப் பரிசுகள்

ஐ.வி.டி.பி யின் கல்விப் பணிகளில், கல்லூரி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை மட்டுமில்லாமல், மாணவிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அவ்வப்போது ஊக்கப்பரிசுகளையும் வழங்கி வருகிறது ஐ.வி.டி.பி நிறுவனம். அவ்வகையில் சேலம், **தூய மரியன்னை சமுதாய நல நர்சிங் கல்லூரியில்** பயிலும் 20 ஆதரவற்ற ஏழை மாணவிகளுக்கு **ரூ.31602/-** மதிப்பிலான டைட்டான் வாட்ச்கள் மற்றும் 20 மாணவிகளுக்கு **ரூ. 2.72 இலட்சம்** மதிப்பில் தங்க காதணிகள் என மொத்தம் **ரூ. 3.03 இலட்சம்** மதிப்பிலான ஊக்கப்பரிசுகள் வழங்கப்பட்டது.





## பள்ளி விளையாட்டு விழாவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு விருதுகள்

ரூ. 1.01 இலட்சம்

இன்றைய காலக்கட்டத்தில் மாணவர்கள் கல்வியில் மட்டுமில்லாமல், விளையாட்டிலும் சிறந்து விளங்கும் வகையில், பள்ளி அளவிலான வருடாந்திர விளையாட்டு போட்டியை அனைத்து பள்ளிகளும் சிறப்பாக நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் போட்டிகளில் கலந்துக் கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு ஐ.வி.டி.பி நிறுவனர் வெள்ளி மற்றும் தங்கப் பதக்கங்களை வழங்கி கௌரவித்தார்.

கோட்டையூர், ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளியில், போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற 12 மாணவர்களுக்கு தலா 30 கிராம் எடையுள்ள வெள்ளிப் பதக்கம், 1 மாணவருக்கு 20 கிராம் எடையுள்ள வெள்ளிப் பதக்கம்

ரூ. 49 ஆயிரம்.

கிருஷ்ணகிரி, புனித அன்னாள் பப்ளிக் பள்ளி விளையாட்டு விழாவில் ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்ற 7 மாணவர்களுக்கு தலா 1 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம்

ரூ. 52 ஆயிரம்.



## மெட்டாலா, இலயோலா கல்லூரிக்கு
## தையல் இயந்திரங்கள்

ரூ. 1.24 இலட்சம்

மெட்டாலா, இலயோலா கல்லூரியில் பயிலும் மாணவியர் கல்லூரி கல்வியோடு சுயத்தொழில் கற்று மேன்மையடையும் வகையில் தையற்பயிற்சி பெறுவதற்காக, அக்கல்லூரிக்கு ஐ.வி.டி.பி நிறுவனத்தின் பங்களிப்பாக மொத்தம் **ரூ.1.24 இலட்சம்** மதிப்பிலான **20 தையல் இயந்திரங்களை** வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.



## கிருஷ்ணகிரி, தொன் போஸ்கோ
## மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிக்கு கணினி

ரூ. 50 ஆயிரம்

கிருஷ்ணகிரி, தொன் போஸ்கோ மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், ஆசிரியர்கள் இணைய வழி மூலம் மாணவர்களுக்கு பாடம் கற்பிக்கவும், மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் விதமாகவும், ஐ.வி.டி.பி நிறுவனம் அப்பள்ளிக்கு **ரூ.50,396/-** மதிப்பிலான கணினியை வழங்கி உதவியது.

## கீரனூர் தொன் போஸ்கோ இளைஞர் கிராம மாணவர்களுக்கு
## தங்க நாணயங்கள்

ரூ. 37 ஆயிரம்



கீரனூர் தொன் போஸ்கோ இளைஞர் கிராமத்தைச் சார்ந்த சுய உதவிக்குழு மகளிரின் குழந்தைகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 90% மேல் மதிப்பெண் பெற்ற 5 மாணவர்களுக்கு தலா **ரூ.7490/-** என மொத்தம் **ரூ. 37450/-** மதிப்பிலான **1 கிராம் தங்க நாணயங்களை** வழங்கி ஊக்குவித்தார் ஐ.வி.டி.பி நிறுவனர்.

## கிருஷ்ணகிரி, புனித அன்னாள் பப்ளிக் மற்றும் மகளிர் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்கப் பரிசுகள்

ரூ. 2.44 இலட்சம்



ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனம், மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திலும், அவர்களை நன்னெறிப்படுத்தவும் அயராது உழைக்கும் பள்ளி ஆசிரியர்களைப் பாராட்டும் வகையில் ஆசிரியர் தினவிழாவில் ஊக்கப்பரிசுகளை வழங்கியது. அவ்வகையில்

- கிருஷ்ணகிரி புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப் பள்ளியின் 55 ஆசிரியர்களுக்கு தலா ரூ.2134/- என மொத்தம் ரூ.1.17 இலட்சம் மதிப்பிலான Prestige குக்கர்கள்
- கிருஷ்ணகிரி புனித அன்னாள் பப்ளிக் பள்ளியில் பணியாற்றும் 39 ஆசிரியர்களுக்கு தலா ரூ.2134/- என மொத்தம் ரூ.83226/- மதிப்பிலான Prestige குக்கர்கள்
- மேலும் ஆசிரியர் தின விழாவில் கலந்துக் கொண்ட அனைத்து ஆசிரியர்களுக்கும் மதிய உணவு ரூ.44 ஆயிரம் மதிப்பில் வழங்கப்பட்டது.

இதுவரை கல்வி மற்றும் கல்லூரி ஆசிரியர்களின் பணியைப் பாராட்டி ஐ.வி.டி.பி வழங்கிய மொத்தத் தொகை

ரூ. 1.27 கோடி

## கிருஷ்ணகிரி மாவட்ட அரசு பள்ளி மாணவர்களுக்கு உணவு மற்றும் வாட்டர் பாட்டில்கள்

ரூ. 1.31 இலட்சம்

கிருஷ்ணகிரி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியரின் கற்றல் திறனை மேம்படுத்துவதுடன், அவர்களை விளையாட்டுத் துறையிலும் சிறப்புடையவர்களாக திறன்படுத்தும் வகையில் மாணவர்களிடையேயான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பெற்றது. போட்டிகளில் பங்கேற்ற 1500 மாணவர்களுக்கு தேவையான உணவு மற்றும் வாட்டர் பாட்டில்களை வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.

இவற்றின் மொத்த மதிப்பு ரூ.1.31 இலட்சம் ஆகும்.



KARKINOS

## ஐ.வி.டி.பி நிறுவனத்தின் பணியைப் பாராட்டி

## கார்கினோஸ் நிறுவனத்தின்

# சமூகத் தாக்கச் சான்றிதழ்

KARKINOS
COMMUNITY HEALTH IMPACT
CERTIFICATE



ஐ.விடி.பி நிறுவனம் கடந்த 2022 ஆம் ஆண்டு முதல், **Karkinos - Mumbai, St.Johns Medical College - Bangalore, St.Louis Hospital – Krishnagiri** நிறுவனங்களோடு இணைந்து, ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு கருப்பை புற்றுநோய், வாய் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய் மற்றும் கருப்பை வாய் புற்றுநோய் போன்ற புற்றுநோய்களை கண்டறியும் மருத்துவப் பரிசோதனை முகாமினை நடத்தி, இலவச உயர்சிகிச்சை வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

அங்ஙனம் ஐ.விடி.பி நிறுவனம், மும்பையைச் சார்ந்த வாய்ந்த கார்கினோஸ் நிறுவனத்துடன் நவம்பர் 2022 முதல் மார்ச் 2024 வரை புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு, மகளிரை அதிகம் பாதிக்கும் கருப்பை புற்றுநோய், மார்பகப் புற்றுநோய் மற்றும் கருப்பை வாய் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு, ஐவிடிபி பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்களிடையே ஏற்படுத்தும் நோக்கில், ஆரம்ப நிலை புற்றுநோய் கண்டறிதல் முகாமில் ஐவிடிபி சுய உதவிக்குழுக்களின் **10101** உறுப்பினர்களுக்கு ஆரம்பநிலை புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. சமூகத்தில் இத்தகைய மாற்றத்தையும், மக்களிடையே விழிப்புணர்வையும் ஏற்படுத்திய ஐ.வி.டி.பி யின் சேவையைப் பாராட்டி, கார்கினோஸ் நிறுவனம் சமூகத் தாக்கச் சான்றிதழை **(Community Health Impact Certificate)** வழங்கி கௌரவித்தது.

# தானம்பட்டி, பகுதியில் செயல்படும் ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்களின்

## 20 ஆம் ஆண்டு நிறைவு விழா



கிருஷ்ணகிரி மாவட்டம், தானம்பட்டியைச் சார்ந்த சுய உதவிக்குழுக்களான **ஜாதிமல்லி, பாசமலர், அறிஞர் அண்ணா மற்றும் மகாநதி** ஆகிய 4 குழுக்களும் தங்களின் குழுக்கள் தொடங்கி 20 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், **20 ஆம் ஆண்டு** நிறைவு விழாவைக் கொண்டாடி, ஐ.வி.டி.பி நிறுவனருக்கு தங்கள் நன்றியைத் தெரிவித்தனர்.

## தோழி கூட்டமைப்பின் 100 பணியாளர்களுக்கு **புத்தகப்பைகள்**

ரூ. 90 ஆயிரம்



தருமபுரி மாவட்டத்தில், நல்லம்பள்ளி கிராமத்தில் இயங்கி வரும் தோழி கூட்டமைப்பு மக்கள் நலனில் அக்கறைக் கொண்டு செயல்பட்டு வரும் ஒரு அமைப்பாகும். இந்த கூட்டமைப்பின் 2 ஆம் ஆண்டு பொதுக்குழு கூட்டம், ஏலகிரியில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கலந்துக்கொண்ட **100 பணியாளர்களை** ஊக்குவிக்கும் வகையில் தலா **ரூ.900/-** என மொத்தம் **ரூ.90 ஆயிரம்** மதிப்பிலான **புத்தகப்பைகளை** வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.

**மதிப்பிற்குரிய உயர்திரு. குழந்தை பிரான்சிஸ்**
**ஐயா அவர்களுக்கு, வணக்கம் !**



11.06.2025
ஆம்பூர்.

ஆம்பூர் பகுதியைச் சேர்ந்த டைமண்ட் குழு உறுப்பினர்கள், அனைவரின் சார்பாக கரம் தூக்கி, சிரம் தாழ்த்தி, தாங்கள் ஆற்றி வரும், தூய தொண்டினை தலை வணங்கி, வாழ்த்துகளையும் வணக்கங்களையும் சமர்ப்பிக்கின்றோம். தங்களின் மகளிர் சுய உதவிக்குழு, புத்துணர்ச்சி இதழில் இருந்து என் உள்ளத்தை தொட்ட வார்த்தைகள், வாசகங்கள், எத்துணை அழகு வாய்ந்தவை. இயக்குநர் இதயத்திலந்து என்ற சொற்றொடர், தூய அன்புள்ளம் கொண்ட வார்த்தைகள். அன்பில்லா இந்த உலகத்திலே, எனக்கு அன்பு செய்ய ஒருவரும் இல்லையே! என்று தவித்துக் கொண்டிருக்கும் சமுதாயத்தில் மாற்றத்தை நோக்கி வீறு நடை போடுவோம் என்ற தங்களது உறுதியான நம்பிக்கைக்கு, எங்களின் தனிபட்ட வாழ்க்கைக்கும், சமுதாயத்தில் புதிய மாற்றத்தை உருவாக்கி கொண்டிருப்பதற்கு, தங்களின் மலரில், மொட்டுக்களில் வெளியிட்ட எங்களது தன்னம்பிக்கையை உற்சாகப்படுத்திய திருமொழிகளாவது

1. வாழ்க்கையில் நேரத்தை மட்டும் வீணாக்காதே, நேரத்தை வீணாக்காமல் இருக்க வாழ்க்கையை வீணாக்காதே!
2. நீ வாழ்க்கையில் எடுக்கும் சில முடிவுகள் தான் உன் வாழ்க்கையில் வெளிச்சமாக மாறும் அல்லது இருளாக மாறும்.
3. உன்னுடைய லட்சியத்தின் வெற்றி பாதையில் செல்லும் வழியில், பல தடைகள் வரலாம். அந்த தடைகளை வென்றால் தான் வெற்றி.
4. எவன் ஒருவன் தன்னை நேசிக்கிறானோ அவனே தனிமையை வெல்கிறான்.
5. சில நேரங்களில் சிறிய நினைவுகள் நம் இதயத்தின் பெரும் பகுதியை மறைக்கின்றன.
6. நீ கட்ட வேண்டியது உன் வெற்றிக்கான பாலம் தான். உன் வெற்றியை தடுக்கும் சுவர் அல்ல.
7. ஒரு தலைவன் தனக்கென கூட்டத்தை சேர்க்க மாட்டான், அவன் பல தலைவர்களை உருவாக்குவான்.
8. நம்மால் நேற்றை சரி செய்ய முடியாது, ஆனால் நாளையை உருவாக்க முடியும்,
9. தோல்வியை ஒரு முறை எதிர்த்து பார்! உன்னை தோற்கடிக்க யாரும் இல்லை என்ற தைரியம் வரும்.
10. நீங்கள் புத்திசாலியான மனிதராக இருந்தால், நீங்கள் அன்பாகவும் இணைந்துக் கொள்ளும் தன்மையுடன் இருப்பீர்கள்.
11. வாழ்க்கையின் பாடத்தை கற்றுக் கொள்ள பெற்றோர்கள் கடந்து வந்த பாதையை அறிந்து கொண்டாலே போதும்.
12. முடியாது என்பது முற்றுப்புள்ளி.!!. முடியும் என்பது வெற்றிப்புள்ளி.
13. சங்கடங்கள் வரும் போது தடுமாறாதே! சந்தர்ப்பங்கள் வரும் போது தடம் மாறாதே !

**என் இதயத்தை தொட்ட வார்த்தைகள்**

“ஒரு முகத்தில் சிரிப்பு இருந்தால் மட்டுமே அந்த உள்ளத்தில் நம்பிக்கை இருக்கும்.” எதிர்பாராத வகையில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட பனித்துளி மகளிர் மன்றத்தை சார்ந்த உறுப்பினர் திருமதி. **செல்வி முருகன்**, உதடு பிளவு சிகிச்சை பெற்ற கொண்ட பத்ம ஸ்ரீ மகளிர் மன்றத்தை சேர்ந்த திருமதி. **பெருமா முருகன்**, ஆசியோரின் சிகிச்சைக்கு முன்னிருந்த புகைப்படமும், **ரூ.6 இலட்சம்** மருத்துவச் சிகிச்சைக்குப் பின் அவர்கள் முகத்தில் படர்ந்த புன்னகையும் கண்டு வியந்து போனேன்.

**இந்த தொண்டு நிறுவனத்தின் மூலம் நாங்கள் பெற்ற நன்மைகள் சொல்லி எண்ணிலடங்காதவைகள்!!!**

- நாங்கள் எங்கள் சொந்த காலில் நிற்க, சிறு சேமிப்பு மூலம் கற்றுக் கொண்டோம்.
- வரும் முன் காப்போம்! வந்த பின்னும் இந்த ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனம் மூலம் புற்றுநோய் பரிசோதித்து, இலவச மருத்துவச் சிச்சையையும் பெற்றுக் கொண்டு உயிர் வாழ்கின்றோம்.
- வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி அளித்து, இழந்து போன உறவுகளுக்கு பணத் தொகையை பெற்றுக் கொள்கிறோம்.
- சுத்தமான தண்ணீர் பருக பாட்டில்களையும், நீராடின பின்பு செவியைச் சுத்தம் செய்ய Bella Cotton Buds பெற்றுக் கொண்டோம்.
- எங்களுக்கு நோய் வராமலிருக்க Bella Napkinகளையும், Bella Senstive Intimate Wash களையும் பெற்றுக்கொண்டோம்.
- தங்க நாணயங்கள், TV, Fridge, washing Machine, LED Bulb, தலையணைகள், தார்ப்பாய்கள் என பல நன்மைகளை பெற்றுக் கொண்ட நாங்கள், தங்களை இந்த உலகிற்கு அர்ப்பணித்த பெற்றோர்களுக்கும், தங்கள் உறவுகளுக்கும் நன்றி கூறி, தாங்கள் நல்ல சுகம் பெற்று வாழ இறைவனை வேண்டி நிற்கிறோம். நன்றி ஐயா.

இங்ஙனம்
திருமதி. ஜான்சி பெலின குமாரி,
**டைமண்ட் குழு ஊக்குநர் மற்றும் உறுப்பினர்கள்**
ஆம்பூர் கிளை, திருப்பத்தூர் மாவட்டம்.



**பெண்களுக்கு சிறகடிக்க கற்று தந்த**
**ஆண்பறவை!**

காரிபட்டியில் உண்டான கருமேகம்!
இன்று வரை தன் சேவை மழையை பொழிகிறதே
இன்னும் நூறாண்டுகள் அது தொடரட்டுமே!
ஆணாய் பிறந்து வந்த எங்கள் அன்னை தெரசாவே!
இன்று இத்தனை இலட்சம் பெண்களுக்கும்
நீங்கள் தான் தாயாய் தகப்பனாய் ஆசானாய்!
அன்று நீர் நட்டு வைத்த ஒற்றை செடியில்
இன்று இலட்சம் பூக்கள் பூத்து
உங்கள் கழுத்தில் மாலையாய் மிளிர்கிறதே!
மதலை பெற்றெடுத்த கருணை கடலே!
திரு.குழந்தை பிரான்கில் ஐயா அவர்களே!
அதிசயம் ஒன்று சொல்லவா!!!
உங்கள் இதயத்தில் மட்டும்
எப்படி இத்தனை பேருக்கு
இத்தனை அறைகள்!
நீங்கள் வாழும் காலத்தில்
நாங்களும் வாழ்வது எங்களுக்கு பெருமை!
உங்கள் சேவையை முன்னெடுத்து செல்வது எங்கள் கடமை!
இத்தனை இலட்சம் விழுதுகளையும்
தாங்கி பிடிக்கும் ஒற்றை ஆலமரமே !
பெண்பறவை தான் தன் குஞ்சுகளுக்கு
சிறகடிக்க கற்று தரும் !
ஆனால் இங்கே ஓர் ஆண்பறவை
இத்தனை பெண்களுக்கும் சிறகடிக்க கற்று தந்ததே!
இராமன் மகசேசே விருது தங்களை அடைந்து
தன்னை பெருமைப் படுத்திக் கொண்டதோ!
உங்கள் சேவை தமிழ் நாடெங்கும் தொடரட்டும் !
உங்கள் புகழ் உலகெங்கும் பரவட்டும்!

**திருமதி. ஜோதி**
**கிருஷ்ணகிரி 4 கிளை.**

**ஐவிடிபி நிறுவனர் பற்றி**
**ஒரு பெண்ணின் ஆத்மார்த்தமான வரிகள்!**

சுவரின்றி சித்திரமில்லை என்பார்கள் அன்று!
இன்று ஐவிடிபி இருப்பின் பல சித்திரங்கள்
வாழ்ந்து கொண்டிருக்கிறது !
என்ன மனிதா புரிய வில்லையா ?
கைரேகைகளை மட்டும் பதித்த பெண்களை!
கையெழுத்துக்களை போட செய்தவரும்
விட்டில் பூச்சிகளாக இருந்த பெண்களை
மின்மினி பூச்சிகளாக மாற்றிய வரும்
அட்ரஸ் இல்லா வாழ்க்கைக்கு
அங்கீகாரம் கிடைக்க செய்தவரும்!
ஒரு மரத்தில் எத்தனை கிளைகள் இருந்தாலும்
அணிவேர் தாங்கி கொண்டிருக்கும்!.
அது போல, ஐவிடிபி – யில் எத்தனை
கிளைகள் இருந்தாலும்,
தன் கரம் கொண்டு தாங்கி கொண்டிருப்பது இவரே!
இவர் தாம் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய
**திரு. குழந்தை பிரான்சிஸ் ஐயா!**
யுகோஸ்லாவியாவில் பிறந்த அன்னை தெரசா தாயை
பார்த்தது இல்லை நாங்கள் !
ஆனால் இறைவன் !
சேலம் மாவட்டம் மின்னாம் பள்ளியில்
பிறந்த தந்தையை காண்பித்தார்!
அவர் வாங்கிய விருதுகள் பல நூறு!
அவர் வாழ வேண்டும் பல நூற்றாண்டு !
என இறைவனிடம் மன்றாடி
கொண்டிருப்போம் !

**திருமதி. நதியா**
**திருப்பத்தூர் 1 கிளை**



# ஐ.வி.டி.பி. சுய உதவிக் குழுக்கள் விவரம் ( அக்டோபர் 2025 வரை )

ஐ.வி.டி.பி. செயல்படும் மாவட்டங்கள்: கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் & வேலூர்

ஐ.வி.டி.பி.கிளைகள் : 81 சுயஉதவிக்குழுக்கள்: 14,600

சுய உதவிக்குழு உறுப்பினர்கள்: 2,55,500

ஐ.வி.டி.பி.குழுக்களின் மொத்த சேமிப்பு : ரூ. 1654.00 கோடி

ஐ.வி.டி.பி. உறுப்பினர்கள் பெற்ற மொத்த இலாபப் பங்கீடு: ரூ. 1005.410 கோடி

## கடன் விவரம்

| விவரம் | மார்ச் 2025 வரை | ஏப்ரல் 2025–அக்டோபர் –2025 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற மொத்த வங்கிக் கடன் தொகை | ரூ. 8602.64 கோடி | ரூ. 812.00 கோடி | ரூ.9414.64 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் உள்கடனாக பெற்ற சங்கக் கடன் தொகை | ரூ. 5129.11 கோடி | ரூ. 113.00 கோடி | ரூ. 5242.11 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற ஐ.வி.டி.பி. கடன் தொகை | ரூ. 431.34 கோடி | ரூ. 10.00 கோடி | ரூ. 441.34 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் சுகாதாரத் திட்டங்களுக்காக பெற்ற கடன் தொகை | ரூ. 281.00 கோடி | ரூ. 7.12 கோடி | ரூ. 288.12 கோடி |
| **மொத்தம்** | ரூ. 14444.09 கோடி | ரூ. 942.12 கோடி | ரூ. 15386.21 கோடி |

## மனித நேயப் பணிகளில் ஐ.வி.டி.பி.

| விவரம் | மார்ச் 2025 வரை | ஏப்ரல் 2025–அக்டோபர்2025 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| கிருஷ்ணகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் (அஞ்செட்டி, உரிகம், நாட்றாம்பாளையம், தக்கட்டி) 331 தடுப்பணைகள் கட்டியதற்காக | ரூ. 5.00 கோடி | - | ரூ. 5.00 கோடி |
| கூரை வீடுகளை ஓட்டு வீடுகளாக மாற்றியதற்காக (2000 வீடுகள்) | ரூ. 2.00 கோடி | - | ரூ. 2.00 கோடி |
| மருத்துவமனை, சிறைகள், தொழுநோயாளிகள், முதியோர் இல்லம், கடைநிலைப் பணியாளர்களுக்கான நிலை வைப்பு | ரூ. 3.46 கோடி | ரூ. 11.00 இலட்சம் | ரூ. 3.57 கோடி |
| மறைந்த உறுப்பினர்களின் வாரிசுகள் பெற்ற வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி | ரூ. 68.43 கோடி | - | ரூ. 68.43 கோடி |
| உறுப்பினர்களுக்கான நலத்திட்டங்கள்: குடிசை தீ விபத்து நிதியுதவி, கோசலை விருது, சிக்குண்ணா பரிசு, ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம், அன்னையர் தினப் பரிசுகள், தையல் பயிற்சிகள், வெள்ள நிவாரணப்பணி, விதவை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை | ரூ. 11.42 கோடி | ரூ. 2.28 கோடி | ரூ. 13.7 கோடி |
| பணியாளர்களுக்கான ஊக்கப்பரிசு, உதவித்தொகை, சீருடை, மருத்துவச் செலவுகள் | ரூ. 9.75 கோடி | ரூ. 57.72 இலட்சம் | ரூ. 10.32 கோடி |
| ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளி, கோட்டையூர், ஐ.வி.டி.பி. கம்ப்யூட்டர் பயிற்சி மையம், அனுமந்தபுரம் மற்றும் புதிய பயிற்சி மையக் கட்டடம், கிருஷ்ணகிரி ஆசிரியரின் வளர்ச்சிப் பணிகளுக்காக | ரூ. 17.38 கோடி | ரூ. 26.6 இலட்சம் | ரூ. 17.64 கோடி |
| பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை, இதர கல்விப் பணிகள் மற்றும் விளையாட்டு துறைக்கு வழங்கியது. | ரூ. 25.83 கோடி | ரூ. 1 கோடி | ரூ. 26.83 கோடி |
| குழந்தைகள் இல்லங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி | ரூ. 57.94 இலட்சம் | | ரூ. 57.94 இலட்சம் |
| கார்கில் போர், குஜராத் பூகம்பம், சுனாமி, தானே புயல், வர்தா புயல், கஜா புயல் நிவாரணம் மற்றும் கேரளா, நீலகிரி & சென்னை வெள்ள நிவாரணப் பணிகளுக்காக | ரூ. 4.91 கோடி | - | ரூ. 4.91 கோடி |
| கொரோனா நோய் நிவாரணப் பணிகள் மற்றும் நிதியுதவி | ரூ. 3.72 கோடி | - | ரூ. 3.72 கோடி |
| இருளர் நிவாரணப் பணிகள் | ரூ. 1.22 கோடி | - | ரூ. 1.22 கோடி |
| ஐ.வி.டி.பி. உறுப்பினர்களின் புற்றுநோய் பரிசோதனை மற்றும் மருத்துவச் சிகிச்சைக்காக | ரூ. 7.46 கோடி | ரூ. 3.1 கோடி | ரூ. 10.56 கோடி |
| **மொத்தம்** | ரூ. 161.15 கோடி | ரூ. 7.33 கோடி | ரூ. 168.48 கோடி |

**ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவனம்**

கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் & வேலூர் மாவட்டங்கள்

ஐ.வி.டி.பி. இல்லம், 9ஈ சாந்தி நகர் 3 வது கிராஸ், கிருஷ்ணகிரி–635 001.

Ph: 04343-232 129, 236 420 e-mail: francis@ivdpkrishnagiri.org Web: www.ivdpkrishnagiri.org